பக்கங்கள்:-19

காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | தை 09 | புதன்கிழமை | 22.01.2025 | அதிர்வு 173

## சடலமாக மீட்கப்பட்ட சிசுவின் தாய் உள்ளிட்ட மூவர் கைது!

(எஸ்.ரகுதீஸ்)

யாழ்ப்பாணத்தில் தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து தொப்புள் கொடியுடன் மீட்கப்பட்ட சிசுவின் தாய் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதடி பகுதியில் உள்ள 06

## சிறீதரன் எம்.பி. விமான நிலையத்தில் தடுக்கப்பட்ட விவகாரம்: விசாரணை நடத்துமாறு உரிய தரப்புக்கு அரசு அறிவுறுத்து

நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விமான நிலையத்தில் எதிர்கொண்ட அசௌகரியத்துக்கு வருத்தமடைகின்றோம். இந்தச் சம்பவத்துக்கும் அரசுக்கும் எவ்வித தொடர்பும், தலையீடும் கிடையாது. விசாரணைகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தியுள்ளோம்.”

– இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின்போது பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்தார். இதற்குப் பதிலளிக்கையில் சபை 05



### 15 வருடங்களாக நடக்கும் வழக்கில்

# செல்வம் எம்.பியின் கடவுச்சீட்டை தடுத்துவைக்க இப்போது உத்தரவு

### அனுராதபுரம் நீதிமன்றம் நேற்றுக் கட்டளை



(கி.வசந்தன்)

**“கடவுச்சீட்டை நீதிமன்றில் ஒப்படைக்குமாறும், நீதிமன்ற அனுமதி பெற்றே வெளிநாடு செல்ல முடியும் எனவும் அனுராதபுரம் மேல் நீதிமன்றம் எனக்குக் கட்டளை பிறப்பித்துள்ளது.”**

**- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ரெலோ அமைப்பின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.** 05

## அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம்



### தேசிய மக்கள் சக்தி அரசு உறுதி

“அரசியல் கைதிகள் என்று சொல்லப்படுபவர்களை வைத்து அரசியல் நடத்த இடமளிக்க மாட்டோம். அவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்போம்.”

– இவ்வாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கே.எம். ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“அரசியல் கைதிகள் என்று சொல்லப்படுபவர்கள் தொடர்பில் நீதி அமைச்சர் 05



## சட்ட ரீதியாக வழங்கப்பட்ட ‘பார் பெர்மிட்’டை பலவந்தமாக இரத்துச் செய்யவே முடியாது!

### அநுர அரசு குத்துக்கரணம்

“தேசிய மக்கள் சக்தி அரசு புதிதாக மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கவில்லை, வழங்கப்போவதும் இல்லை. அதேவேளை, கடந்த ஆட்சியில் சட்ட ரீதியில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களைப் பலவந்தமான முறையில் இடைநிறுத்தினால் சட்டச் சிக்கல்களை ஏற்படுத்தும். அனுமதிப்பத்திரம் சட்டரீதியில் வழங்கப்பட்டதைத் 06




‘யாழ்ப்பாணம் கலாசார நிலையம்’ என்ற பெயரை தமிழ் அரசியல் தலைமைகளின் ஆலோசனை கலக்காமல் – அவர்களை இருட்டில் வைத்துக் கொண்டு – திடுதிப்பென, காதோடு காது வைத்தால் போல – ஒரே நாளில் – ‘திருவள்ளுவர் கலாசார மையம்’ என்று பெயர் மாற்றிய இந்திய தரப்பின் நடவடிக்கை வடக்கு, கிழக்கு தமிழர்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

யாழ் மாநகர சபைக்கென கட்டப்பட்ட இந்த நிலையத்தை வைத்துக் கொண்டு இந்தியா பண்ணும் குத்துக் கரணம் மலைக்க வைப்பது.

ஏற்கனவே கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் இத்தகைய முயற்சி எடுக்கப்பட்ட போது, தமிழர் தரப்பில் தெரிவு செய்யப்பட்டிருந்த யாழ் மாநகர சபையின் தலைமைகளோடு சேர்ந்து நின்று, அந்தத் திட்டத்திற்கு இணங்க மறுத்த இந்தியத் தரப்பு, இப்போது திடீரென ‘பல்டி’ அடித்திருக்கிறது. ‘யாழ்ப்பாணம்’ என்ற பெயரை அதிலிருந்து அகற்றுவதற்கு தென்னிலங்கை 05

# நினைவேந்தல் நிகழ்வை தடுத்து நிறுத்துமா அரசு?

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் விளக்கம்

நினைவேந்தல் என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பில் இனிமேல் அதிக கவனம் செலுத்தப்படும் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கே.எம்.ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“உயிழந்த தமது உறவுகளை நினைவேந்த எந்த இனத்தவர்களுக்கும் முழு உரிமையுண்டு. அதை எமது அரசு தடுத்து நிறுத்தாது.

ஆனால், வடக்கு, கிழக்கில் சில நினைவேந்தல் நிகழ்வுகளில் அரசியல் தலையீடு ஆதிக்கம் செலுத்துவதால் அது வெளியில் வேறொரு கோணத்தில் பார்க்கப்படுகின்றது. தெற்கில் உள்ள ஒரு தரப்பினர் அதைப் பயங்கரவாதக் கண்ணோட்டத்துடன் பார்க்கின்றனர். இதனால் வடக்கு – தெற்கு அரசியல்வாதிகளுக்கிடையில் பொது வெளியில்



கருத்து மோதல்கள் இடம்பெறுகின்றன.

எனவே, நினைவேந்தல் என்ற பெயரில் வடக்கு, கிழக்கில் இடம்பெறும் நிகழ்வுகள் தொடர்பில் இனிமேல் அதிக கவனம் செலுத்தப்படும். நினைவேந்தல் நிகழ்வுகளைத் தடுத்து நிறுத்துவது எமது நோக்கம் அல்ல.” – என்றார்.

# விமான நிலையத்தில் சிறீதரனுக்கு அநீதி!

## விரிவான விசாரணை வேண்டும் என நாடாளுமன்றில் ஹக்கீம் வலியுறுத்து



இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுக்கு விமான நிலையத்தில் இடம்பெற்ற விடயம் தொடர்பில் விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் விமான நிலையத்தில் தடுக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்ற தருணத்தில் நானும் அங்கு இருந்தேன். குடிவரவு – குடியகல்வுத் திணைக்கள அதிகாரிகள் அவருக்கு எதிராகப் பயணத் தடை உள்ளது என்று கூறினர். அதனைத் தொடர்ந்து கலந்துரையாடி நாம் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்தோம்.

இத்தகைய விடயங்கள் காணப்படின் நீதிமன்றத்தின் உத்தரவு அவசியம். ஆனால், அதிகாரிகள் அவருடைய நாடாளுமன்ற வரப்பிரசாத்தை மீறும் வகையில் செயற்பட்டுள்ளனர்.

அரசு இன்னமும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு இந்த விடயத்தில் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.” – என்றார்.

# யாழில் கள்ளுத் தவறணையில் கள் அருந்திய குடும்பஸ்தர் சாவு

(எஸ்.ரகுதீஸ்)

கள்ளுத் தவறணையில் கள் அருந்திய குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் யாழ். இளவாலை சென்யூட் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் சங்குவேலி தெற்கு, மானிப்பாயைச் சேர்ந்த ஆறுமுகம் தங்கவேலு (வயது 64) என்ற மூன்று பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் இளவாலை சென்யூட் பகுதியில் உள்ள கள்ளுத் தவறணையில் கள் அருந்திக் கொண்டிருந்தபோது உயிரிழந்துள்ளார்.

சடலம் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். சாட்சிகளை இளவாலைப் பொலிஸார் நெறிப்படுத்தினர்.

# வேகக் கட்டுப்பாட்டை இழந்த ஓட்டோ! பரிதாபகரமாக உயிரிழந்த குழந்தை!!

## தந்தை, தாய் படுகாயங்களுடன் வைத்தியசாலையில்



ஓட்டோ விபத்தில் ஒரு வயது ஆண் குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்துள்ளது. அந்தக் குழந்தையின் தந்தையும், தாயும் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மொனராகலை மாவட்டம், செவனகலை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குடும்பத்தினர் பயணித்த ஓட்டோ ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் இருந்து விலகி மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன்போது ஓட்டோவில் பயணித்த ஒரு வயது ஆண் குழந்தை சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளது.

ஓட்டோவைச் செலுத்திச் சென்ற குழந்தையின் தந்தையும் (வயது 36), ஓட்டோவின் பின் ஆசனத்தில் குழந்தையை மடியில் வைத்திருந்த தாயும் (வயது 28) படுகாயங்களுடன் செவனகலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பருத்தித்துறை வாள்வெட்டு சம்பவம்: சந்தேகநபர்களுக்கு விளக்கமறியல்!



(எஸ்.ரகுதீஸ்)

பருத்தித்துறையில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் மூவரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை பருத்தித்துறை கொட்டடிப் பகுதியில் தேசிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் தேடப்பட்டு வந்த சந்தேக நபர்கள் மூவர் பொலிஸில் சரணடைந்திருந்தனர்.

சட்டத்தரணி ஒருவர் மூலம் மேற்படி மூன்று சந்தேக நபர்களும் நேற்றுமுன்தினம் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தனர்.

இந்நிலையில், மூன்று சந்தேகநபர்களையும் பொலிஸார் நேற்று பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிவான் மூன்று சந்தேகநபர்களையும் எதிர்வரும் 3 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

# தென்னை மரத்திலிருந்து வீழ்ந்து குடும்பஸ்தர் சாவு!



தேங்காய் பறிக்கத் தென்னை மரத்தில் ஏறிய குடும்பஸ்தர் ஒருவர் தவறி கீழே வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் அம்பாந்தோட்டை மாவட்டம், சூரியவெவை பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.

42 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே சம்பவத்தில் சாவடைந்துள்ளார்.

மேற்படி நபர் தேங்காய் வியாபாரி என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

# 25 லட்சம் மெட்ரிக் தொன் நெல் அறுவடை செய்யப்படும்



மீண்டும் அரிசியை இறக்குமதி செய்வது தொடர்பில் இதுவரை எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என வர்த்தக, வாணிப, உணவுப் பாதுகாப்பு, கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

பெரும்போக விளைச்சலை அறுவடை செய்த பின்னர் நாட்டில் காணப்படும் அரிசி பற்றாக்குறைக்கு தீர்வு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுவதாக பிரதியமைச்சர் ஆர். எம். ஜயவர்தன தெரிவிக்கிறார்.

சில மாவட்டங்களில் தற்போது நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

அரசி ஆலைகளில் காணப்படும் நெல் கையிருப்பை சந்தைக்கு விடுவிக்க வர்த்தகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அரிசி இறக்குமதியின் காரணமாக விவசாயிகள் கடும் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியுள்ளதாக பிரதியமைச்சர் ஆர். எம். ஜயவர்தன சுட்டிக்காட்டினார். பெரும்போகத்தில் 25 லட்சம் மெட்ரிக் தொன் நெல் அறுவடை செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# இராணுவ முகாமில் காணாமல் போன ரி 56 துப்பாக்கிகளில் 38 துப்பாக்கிகள் மீட்பு



இராணுவ முகாமொன்றில் காணாமல் போயிருந்த ரி 56 ரக 73 துப்பாக்கிகளில் 38 துப்பாக்கிகள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கண்டுபிடிக்கப்பட்ட துப்பாக்கிகள் மேலதிக சோதனைகளுக்காக அரச இரசாயனப் பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

காணாமல் போனதாகக் கூறப்படும் ஏனைய துப்பாக்கிகளைத் தேடும் பொருட்டு விரிவான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என பொலிஸார் குறிப்பிட்டனர்.

மேற்படி விசாரணைகள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த விவகாரம் தொடர்பான விசாரணைகள் கடந்த காலத்தில் இடம்பெறவில்லை எனவும் இந்த விசாரணைகள் மீண்டும் விரிவாக முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் தரப்பு உயரதிகாரியொருவர் கூறியுள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி....)

அரசோடு ஒளிவு மறைவு இணக்கத்தைத் திடீரென ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது இந்தியா.

சீனப் பக்கம் சாயும் கொழும்பைக் கட்டுப்படுத்தித் தன் வழி வர வைப்பதற்கு, தேவையானால் ஈழத் தமிழர் நலனையும் பேரம் பேசி விற்க இந்தியா தயங்காது என்ற கருத்து நிலைப்பாடு தமிழர்கள் மத்தியில் ஊன்றி வருகையில், அதை உறுதிப்படுத்துமாற் போல இந்த நடவடிக்கை இப்போது இடம்பெற்றிருக்கின்றது.

ஏற்கனவே கொழும்பைத் தன் கைவசப்படுத்துவதற்காக தமிழர்களுக்காக இதுவரைத் தான் குரல் எழுப்பி வந்த 13 ஆவதுஅரசமைப்புத் திருத்தத்தின் நடைமுறையாக்கத்தையும், மாகாண சபை முறைமையையும் இப்போது திடீரென அடியோடு கைவிட்ட இந்தியா, அதே போக்கை இதிலும் காட்டி இருக்கின்றது என்பதுதான் பலரினதும் கருத்து நிலைப்பாடு.

இது தொடர்பில் இலங்கைத் தமிழரசுக்கட்சியின்அரசியல்குழுநேற்றுஇணைய வழியில் ஒன்று கூடி ஆராய்ந்து இருக்கின்றது. இந்தக் கூட்டத்தில் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், செயலாளர் சத்தியலிங்கம் எம்.பி., சிறிதரன் எம்.பி., மாவை சேனாதிராஜா, துரைராஜசிங்கம் போன்றோர் நேற்றிரவு நடைபெற்ற கூட்டத்தில் பங்குபற்றியிருக்கின்றனர். குறிப்பாக சுமந்திரன் நேற்றைய கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

இவ்விடயத்தில் தமிழரசுக் கட்சியின் அதிருப்தியை – கவலையை – கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் எழுத்தில் இன்று யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் தூதரகத்திடம் கையளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பாக அந்தக் கலாச்சார நிலையத்தின் பெயரில் இருந்த 'யாழ்ப்பாணம்' என்ற சொல் அகற்றப்பட்டமை குறித்து தமிழரசுக் கட்சியின் அதிருப்தியைக் கடிதத்தில் சுட்டிக் காட்டும் சிவஞானம், கட்சியின் இது தொடர்பான மேலதிக கருத்து நிலைப்பாடுகளை நேரடியாக இந்தியத் தரப்புக்கு எடுத்துரைப்பார் எனத் தெரிகிறது. இந்திய தரப்புடன் தேவையற்ற முரண்பாடு ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக பல விடயங்களை எழுத்தில் தெரிவிப்பதை இப்போதைக்கு விலக்கிக் கொண்டு, அவற்றை மேலதிகமாக நேரில் தெரிவிக்க கட்சி தீர்மானித்திருப்பதாக அறியவந்தது.

அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் அரசியல் தலைவர்களுக்கோ பிரதிநிதிகளுக்கோ தெரியாமல், காதும் காதும் வைத்தால் போல் நடந்து கொள்ளும் இந்தியாவின் இந்தப் போக்கு, இந்தியா மீதான தமிழர்களின் நம்பகத்தன்மையை மேலும் பாதிக்கும் என்பதை சிவஞானம் எடுத்துரைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

2015 மார்ச் 14 ஆம் திகதி இந்தக் கலாசார நிலையத்துக்கான அடிகல்லை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி நேரில் வந்து நட்டார். 2023 பெப்ரவரி 11 ஆம் திகதி இந்த கலாசார நிலையத் திறப்பு விழாவில் இணைய வழியில் அவர் கலந்து கொண்டார். அந்த நிகழ்வில் நேரடியாகப் பங்கு கொண்ட அப்போதைய இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அங்கு தாம் ஆற்றிய உரையில் இந்த நிலையத்துக்கு 'சரஸ்வதி' பெயரைச் சூட்ட ஆலோசனை கூறியிருந்தார் என்பதும் நினைவூட்டத் தக்கது.

\+ + +

நாடாளுமன்றத்தில் நேற்றுத் தாம் கிளப்பிய ஒழுங்குப் பிரச்சினை விவகாரத்தில் எம்.ஏ.சுமந்திரன் குறித்து சிறிதரன் எம்.பி. தெரிவித்த கருத்துகள் தமிழர் தரப்பில் தற்போது பேசு பொருளாகியிருக்கின்றது.

இது தொடர்பாக கட்சியின் சிரேஷ்ட பிரதிநிதி ஒருவர் நேற்று ஒரு கருத்துத் தெரிவித்தார்.

இன்று (அதாவது நேற்று 21ஆம் திகதி) இந்த விடயத்தை சிறிதரன் நாடாளுமன்றத்தில் எழுப்பிய பின்புலத்தில் ஒரு விவகாரத்தை அவர் நினைவு கூர்ந்தார்.

"சரியாக ஓர் ஆண்டுக்கு முன்னர் கடந்த ஜனவரி 21 ஆம் திகதிதான் திருகோணமலையில் நடந்த உள்கட்சித் தேர்தலில் கட்சியின் தலைவர் பதவிக்கு சிறிதரன் தேர்வானார். ஆயினும் ஓராண்டாகியும் அந்தப் பதவிக்கு அவர் வர முடியவில்லை. இனியும் வர வாய்ப்பு இருக்குமா என்பது உறுதியாக வில்லை. இந்த பின்புலத்தில் இந்த நாளில் (நேற்றைய தினத்தில்) அவருக்குக் கோபம் பீறிட்டுக் கொண்டிருந்ததில் நியாயம் இருக்கும்தானே!" – என்றார் அந்தப் பிரமுகர்.

விடயம் ஒரு வருடம் தாண்டியாகிவிட்டது. ஏற்கனவே இவ்விவகாரம் நீதிமன்றத்திற்குச் சென்றால் நீண்ட காலம் செல்லும் என்பதை திரும்பத் திரும்ப இப்பத்தியில் பல தடவைகள் முன்கூட்டியே எச்சரித்து வந்தவன் நான். இப்போதும் கூட இந்தப் பிரச்சனை அடுத்த ஓரிரு மாதங்களில் தீரும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இனி என்ன, உள்ளூராட்சித் தேர்தல், அதைத்தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல் என்று இருக்கின்ற நிலையில் அவற்றோடு மல்லுக்கட்ட வேண்டியதுதான்.....!

---

## செல்வம் எம்.பியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அனுராதபுரம் மேல் நீதிமன்றத்தால் வழக்கு ஒன்று தொடர்பில் பிடியாணை பிறப்பிக்கட்ட நிலையில் நேற்று செவ்வாய்க்கிழமை நீதிமன்றத்துக்குச் சென்று வந்த பின்னரே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் முள்ளியவாய்க்காலில் நடந்த அனர்த்தங்களையும், இராணுவம் செய்த கொடூரமான செயற்பாடுகளையும் பொது வெளியில் நான் பேசியதாகவும், விடுதலைப்புலிகளுடன் இணைந்து இலங்கை அரசுக்கு எதிராக நான் சதி செய்தேன் என்று கூறியும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் என்னைக் கைது செய்திருந்தார்கள்.

வவுனியாவிலும், அனுராதபுரத்திலும் இது பற்றிய வழக்குகள் 15 வருடங்களுக்கு மேலாகத் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றன. கடந்த 16 ஆம் திகதி வழக்கு நடைபெற்றபோது நான் அதற்குச் சமூகமளிக்கவில்லை. அதனால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

நேற்று செவ்வாய்க்கிழமை அந்தப் பிடியாணையை நிவர்த்தி செய்வதற்காக நான் எனது சட்டத்தரணியுடன் நீதிமன்றம் சென்றிருந்தேன்.

அங்கு சென்று ஆஜராகியபோது 25 ஆயிரம் ரூபாய் ஆட்பிணையும், எனது கடவுச்சீட்டை ஒப்படைக்க வேண்டும் என்றும் நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டிருந்தது. என்னோடு மரியசீலன் என்பவர் தொர்ச்சியாக இந்த வழக்கில் சமூகமளித்துக் கொண்டிருக்கின்றார். அவர் 8 வருடங்கள் சிறையில் இருந்தவர்.

கடவுச்சீட்டை ஒப்படைக்க வேண்டும், வெளிநாடு செல்வதாக இருந்தால் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்திச் செல்லாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு 15 வருடங்களுக்கு மேலாக நடைபெற்று வருகின்றது." – என்றார்.

---

## சிறீதரன் எம்.பி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

முதல்வர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சிறிதரன் முன்வைத்த சிறப்புரிமை மீறல் பிரச்சினை குறித்து விசேட கவனம் செலுத்தியுள்ளோம்.

இந்த விடயம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு விமான நிலையத் தலைவருக்கு அறிவுறுத்தியுள்ளேன். அத்துடன் பாதுகாப்பு பிரதி அமைச்சருக்கும் இந்த விடயம் தொடர்பில் ஆராயுமாறு அறிவுறுத்தியுள்ளேன்.

நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் முன்வைத்த விடயங்கள் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துடன் தொடர்புடையது. ஆகவே, இந்த விடயம் நாடாளுமன்ற சிறப்புரிமை மீறல் குழுவில் விசாரணைக்குட்படுத்தப்படுமாயின் திணைக்களத்தை அழைக்க முடியும். நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனுக்கு விமான நிலையத்தில் ஏற்பட்ட அசௌகரியத்துக்கு வருத்தமடைகின்றோம்.

இந்தச் சம்பவத்தில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதாகக் குறிப்பிடுவது அடிப்படையற்றது. இவர் நாட்டுக்கு திரும்பி வருகையில் எவ்வித சிக்கலும் ஏற்படவில்லை. ஆகவே, இந்த விடயத்தில் அரசின் தலையீடு ஏதும் கிடையாது.

பயங்கரவாதத்தடைச்சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்ற அபிலாஷையும், கொள்கையும் அரசுக்குக் கிடையாது. இருப்பினும் மாற்றீடாக புதிய சட்டம் இயற்றப்படும் வரை இந்தச் சட்டத்தைக் கவனமான முறையில் பொதுப் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு அமுல்படுத்த நேரிடும்." – என்றார்.

---

## அரசியல் கைதிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

தெரிவித்த கருத்தை சிலர் மீண்டும் அரசியலாக்கியுள்ளனர். உண்மையில் நீதிமன்ற வழக்குகளில் அரசியல் கைதிகள் என்று எவரும் இல்லை. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள வடக்கு, கிழக்கு தமிழர்களைத்தான் அரசியல் கைதிகள் என்று ஒரு தரப்பினரும், புலிகள் அமைப்பின் சந்தேகநபர்கள் என்று இன்னொரு தரப்பினரும் கூறி வருகின்றனர்.

அப்படியானவர்களில் 10 பேர் வரை தற்போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீதான வழக்குகளை ஆராய்ந்து அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம். எனவே, அரசியல் கைதிகள் என்று சொல்லப்படுபவர்களை வைத்து அரசியல் நடத்த இடமளிக்கமாட்டோம்." – என்றார்.





# அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கு உலக வங்கி நிதி, தொழில்நுட்ப ஆதரவு

அரசாங்கத்தின் முக்கியமான திட்டங்களுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி வழங்க நடவடிக்கை எடுப்பதாக உலக வங்கியின் தெற்காசியப் பிராந்தியத்திற்கான உப தலைவர் மார்டின் ரேசர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கும் திட்டம், க்ளீன் ஸ்ரீலங்கா திட்டம், கிராமிய வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் திட்டங்களுக்கு உலக வங்கியிடமிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வழங்க இதன்போது உடன்பாடு வெளியிடப்பட்டதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கல்வி, எரிசக்தி, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் வடக்கு அபிவிருத்தி ஆகியவற்றின் புதிய திட்டங்களுக்கு உதவி வழங்குவது குறித்து இதன் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

உலக வங்கியினால் இலங்கைக்கு வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள கடன் உதவியை உரிய சந்தர்ப்பத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அதன் தெற்காசியப் பிராந்தியத்துக்கான உப தலைவர் மார்டின் ரேசர் குறிப்பிட்டுள்ளார்.

கல்வித் துறை முன்னேற்றத்தின் மூலம் கிராமிய வறுமையை ஒழிக்க முடியும் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த சந்திப்பின் போது குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக புதிய அரசாங்கத்தால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கல்வி சீர்திருத்த முயற்சிகளுக்கும், பொதுப் போக்குவரத்துத் துறையின் முன்னேற்றத்திற்கும் தேவையான உதவிகளை வழங்குமாறு உலக வங்கி பிரதிநிதிகளிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்துள்ளார்.

குறிப்பாக வடக்கின் அபிவிருத்திக்கு அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்களை நிறுவ நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இதன்போது கூறியுள்ளார்.





## சட்ட ரீதியாக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொடர்ந்து அது சட்ட ரீதியான ஆவணமாகும். அதைப் பலவந்தமான முறையில் இரத்துச் செய்ய முடியாது.”

– இவ்வாறு சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கிளீன் ஸ்ரீலங்கா செயற்றிட்டம் மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றிய கவீந்திரன் கோடீஸ்வரன் எம்.பி., “கல்முனை – நீலாவணை பகுதியில் புதிதாக மதுபான நிலையங்களைத் திறப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு அந்தப் பிரதேச மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்கள். கடந்த அரசு வழங்கிய மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்வதாக அரசு குறிப்பிட்டது. ஆனால், இதுவரை அதற்கான நடவடிக்கைகள் ஏதும் எடுக்கப்படவில்லை.” – என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளிக்கையில் சபை முதல்வர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது:-

“தேசிய மக்கள் சக்தி தலைமையிலான எமது அரசு புதிதாக மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் ஏதும் விநியோகிக்கவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பெரும்பாலான மதுபானசாலை அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் மதுபானசாலை பத்திரங்கள் குறித்து நாடாளுமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு ஹன்சாட்டில் பதியப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரம் சட்ட ரீதியில் வழங்கப்பட்டதைத் தொடர்ந்து அது சட்ட ரீதியான ஆவணமாகக் கருதப்படும். அரசியல் ரீதியில் விருப்பம் இல்லாவிடினும் அதனை இரத்துச் செய்வது சட்டச் செயற்பாடாகும். அரசால் பலவந்தமான முறையில் இரத்துச் செய்ய முடியாது.

இருப்பினும் நிர்வாகக் கட்டமைப்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இவ்வாறான பழைய குப்பை மேடுகளை கிளீன் செய்யவே முயற்சிக்கின்றோம். எமது அரசு புதிதாக மதுபானசாலை அனுமதிப்பத்திரங்களை வழங்கமாட்டாது.

சட்ட ரீதியில் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரங்களைப் பலவந்தமான முறையில் இடைநிறுத்தினால் சட்ட சிக்கல்களை ஏற்படுத்தும். இருப்பினும் நிர்வாகம் மற்றும் சமூகக் கட்டமைப்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.” – என்றார்.

## சடலமாக மீட்க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தோட்டக் கிணறு ஒன்றில் இருந்து நேற்று செவ்வாய்க்கிழமை காலை சிசுவின் சடலம் மீட்கப்பட்டது.

தோட்டத்துக்குச் சென்ற விவசாயிகள் கிணற்றினுள் சிசு ஒன்றின் சடலம் மிதப்பதாகச் சாவகச்சேரி பொலிஸாருக்கு அறிவித்தனர். இதையடுத்துச் சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார், சடலத்தை மீட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இது தொடர்பில் சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில், சிசுவின் தாய், தாயின் தாயார் மற்றும் குழந்தை பிரசவித்த தாயின் சகோதரி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் மூவரையும் இன்று புதன்கிழமை சாவகச்சேரி நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





# நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி அநுர கலந்துரையாடல்

2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைத் தயாரிப்பது தொடர்பாக நிதி அமைச்சின் அதிகாரிகளுடன் முதற்கட்ட கலந்துரையாடல் நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

செயற்திறனுடனும், திறமையாகவும் பொருளாதார செயல்முறையைக் கையாள்கையில் பொதுப் போக்குவரத்தை நிறுவுவதன் முக்கியத்துவம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பது குறித்தும் இதன் போது ஆராயப்பட்டது.

மேலும், கடந்த அரசாங்கங்களில் பன்முகப்படுத்தப்பட்ட நிதிக்காகப் பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், அந்தப் பணம் பயனுள்ள திட்டங்களுக்குப் பயன்படுத்தப்படவில்லை எனவும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியை தேசிய திட்டங்களுக்குப் பயன்படுத்தக் கூடிய வகையில் வழங்குவது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

அத்தோடு நெல் கொள்வனவு செய்வதற்காக அரிசி உற்பத்தியாளர்களுக்கு வழங்கும் கடன்களை ஒரு வருடத்திற்குள் வசூலிப்பது குறித்தும் அந்த வர்த்தகர்களிடம் உள்ள அரிசி கையிருப்புகளை ஒழுங்குபடுத்துவது குறித்தும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

மேல் தளத்தில் உள்ள பொருளாதாரத்தை கீழ் மட்டத்திற்கு நகர்த்த வேண்டும் என்று சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைத்து பிரதேசங்களுக்கும் பிரிந்து செல்லக் கூடிய ஒரு பொருளாதாரத் திட்டத்தைத் தயாரிப்பதன் முக்கியத்துவத்தையும் குறிப்பிட்டார்.

தற்பொழுது அமுலில் இருக்கும் நிவாரணம் வழங்கும் முறையில் குறைபாடுகள் உள்ளதாகவும், நிவாரணங்கள் தேவையான சமூகத்தை சரியாக அடையாளம் கண்டு, அந்த செயல்முறையை விரைவுபடுத்த வேண்டுமெனவும் ஜனாதிபதி இதன் போது தெரிவித்தார்.











# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## என்னே முட்டாள்தனம்....?

அண்மைய நாள்களில் இடம்பெற்ற குற்றங்கள் மற்றும் துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் ஓர் இராணுவ மேஜர், ஆறு இராணுவத்தினர், பொலிஸ் அதிகாரி ஒருவர் மற்றும் ஒரு சிவில் பாதுகாப்பு அதிகாரி ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

நேற்று நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் நீண்ட விளக்கமளித்த அவர், இவ்விடயங்கள் தொடர்பில் திட்டமிட்ட குற்றக் கும்பல்களைச் சேர்ந்த குற்றவாளிகள் 15 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கையில் இப்போது முழு வீச்சாக - மூச்சாக - இயங்கி வரும் பாதாள உலகக் குழுக்களைத்தான் இப்படி 'திட்டமிட்ட குற்றம் இழைக்கும் தரப்புகள்' என்று அடையாளப்படுத்தி நிற்கின்றனர் அரசு தரப்பினரும் பொலிஸாரும்.

நாட்டுக்கு - நாட்டு மக்களுக்கு - இன்று அச்சுறுத்தல் தரும் மிகப்பெரிய குற்றமாக மாறி இருப்பது இந்தப் பாதாள உலகக் குழுக்கள்தான். பெருமளவு மோசமான ஆயுதங்களையும், ஆயுதப் பயிற்சி பெற்ற நபர்களையும் கூட்டிணைத்து அடாவடிக் கும்பல்களாக அவை அராஜகம் புரிந்து காட்டாட்சி செய்கின்றன.

போதைப் பொருள் கடத்தல் உட்பட திட்டமிட்ட வகையில் குற்றங்களை இழைக்கும் இந்தப் பாதாள உலகக் கும்பல்களைக் கட்டுப்படுத்துவதற்கு தன்னுடைய முழு படைப்பிரயோகத்தையும், பாதுகாப்பு ஆளணியையும் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கும் தென்னிலங்கை, அதிலும் விட, வடக்கு - கிழக்கில், தமிழர்தாயகத்தில், படைத்தரப்பை முழுமுனைப்பாகக் குவித்து வைத்துத் தன் ஆக்கிரமிப்புக் கைவரிசையை வெளிப்படுத்தி நிற்பதில்தான் அதீத கரிசனை காட்டி வருகிறது.

பல்லாயிரம் விடுதலைப் போராளிகளைக்கொண்ட பல்வேறு இயக்கங்கள் கடந்த காலத்தில் தமிழர் தாயகத்தில் திடீர் திடீரென முடக்கப்பட்டன. ஆரம்பத்தில் பல்வேறு இயக்கங்கள் விடுதலைப் புலிகளாலும், பின்னர் விடுதலைப்புலிகள் இயக்கம் அரசு படைகளாலும் முடக்கப்பட்ட போது ஆயுதங்களைக் கையாள்வதிலும் தாக்குதல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலும் அனுபவமும் பயிற்சியும் திறமையும் கொண்ட பல்லாயிரம் போராட்ட வீரர்கள் கட்டமைப்பின்றிச் சமூகத்தில் - நட்டாற்றில் - விடப்பட்டவர்கள் போல விடப்பட்டனர். தமிழ்ப் போராளி இயக்கங்களினால் பயன்படுத்தப்பட்ட பெருமளவான ஆயுதங்கள் இன்னுமே மீட்கப்படாத நிலைமை நீடிக்கின்றது.

சமூகத்தில் இப்படி விடுவிக்கப்பட்ட போராளிகளுக்கு அடிப்படை வாழ்வாதார வசதிகள் கூட செய்யப்படவில்லை.

இந்தப் பின்புலத்தில் பாதாள உலகக் குழுக்கள் தோன்றுவதற்கான களச் சூழல் மிகச் சாதகமாக தமிழர் தாயகத்திலேயே நிலவியது நிலவுகிறது. ஆயினும் தமிழ்ப் போராளிகள் கொள்கைகளுக்காகப் போராடதிடசங்கற்பம்கொண்டவர்கள் என்பதனால் இங்கு - தமிழர் தாயகத்தில் - பாதாள உலகக் குழுக்கள் உருவாகவில்லை. அவற்றின்பால் முன்னாள் போராளிகள் ஈடுபாடு காட்டவில்லை.

மாறாக, தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிப்பதற்காக அரைகுறைப் படிப்புகளோடு அரசின் ஆயுதப்படைகளுக்குச் சேர்க்கப்பட்டவர்களில் இருந்துதான் இப்போது பாதாள உலகக் குழுக்கள் பிறப்பெடுத்திருக்கின்றன என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

இந்தப் பாதாள உலகக் குழுக்களைக் கட்டுப்படுத்துவதற்கு தனது படைப் பலத்தை-படையினர்பிரசன்னத்தை-கவனத்தை - தென்னிலங்கையில் அந்த குழுக்கள் ஊடுருவி உள்ள பிரதேசங்களில் செலுத்துவதற்கு அனுப்பாமல், அதற்குப் பதிலாகத் தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பதற்குந்தப் படைகளை முழுமூச்சுடன் தொடர்ந்து பயன்படுத்துகின்றது பேரினவாத அரசுத் தலைமை. என்னே முட்டாள்தனம் இது...?



# 19 வயதுக்குட்பட்ட இருபதுக்கு 20 தொடரில் இலங்கை மகளிர் அணி வெற்றி பெற்றது

19 வயதுக்குட்பட்ட இருபதுக்கு 20 மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இலங்கை அணியின் வெற்றிப் பயணம் தொடர்கின்றது.

இலங்கை மகளிர் தனது 2ஆவது போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணியை எதிர்கொண்டது.

மலேஷியாவின் கோலாலம்பூரில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் இலங்கை மகளிர் 81 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி சார்பாக சஞ்சனா காவிந்தி, சுமுது நிஸங்சலா ஆகியோர் அணிக்கு சிறந்த ஆரம்பத்தை பெற்றுக்கொடுத்தனர்.

முதல் விக்கட் 54 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டதுடன் சுமுது நிஸங்சலா 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

சஞ்சனா காவிந்தி 38 ஓட்டங்களையும் அணித் தலைவி மனுதி நாணாயக்கார 37 ஓட்டங்களையும் தஹமி சனெத்மா 31 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கை மகளிர் அணி 20 ஓவர்களில் 05 விக்கட் இழப்பிற்கு 166 ஓட்டங்களைக் குவித்தது.

வெற்றி இலக்கான 167 ஓட்டங்களை நோக்கி பதிலளித் தாடிய மேற்கிந்தியத் தீவுகள் மகளிர் அணியின் முதல் 03 விக்கட்டுக்களும் 36 ஓட்டங்களுக்கு வீழ்த்தப்பட்டன.

அசேனி தலகுணே மற்றும் லிமங்ஸா திலகரத்ன ஆகியோர் தலா 02 விக்கட்டுக்களை கைப்பற்றினர்.

மேற்கிந்திய தீவுகள் மகளிர் அணியால் 19 தசம் 4 ஓவர்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 85 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.

போட்டியின் சிறந்த வீராங்கனையாக சமுதி ப்ரபோதா தெரிவானார்.



# யாழ். கலாசார நிலையப் பெயர் மாற்றம் மக்களின் நாடித்துடிப்பு அறியாத செயல்

## பசுமை இயக்கத்தின் தலைவர் ஐங்கரநேசன் ஆதங்கம்

இந்திய அரசாங்கத்தின் நன்கொடையின் கீழ் கலாசாரப் பாரம்பரியங்களின் மேம்பாட்டுக்காக நிர்மாணிக்கப்பட்டதும் தனித்துவ மிக்கதுமான யாழ்ப்பாண கலாசார நிலையம் 2023 பெப்ரவரி 11 ஆம் திகதி மக்களுக்கு உரித்தாக்கப்பட்டது. திறப்புவிழாக் கல்வெட்டில் அழியாத எழுத்துகளால் அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கும் வாசகம் இது. ஆனால், மக்களுக்கு உரித்தாக்கப்பட்டு இரண்டு வருடங்கள்கூடக் கடக்காத நிலையில் அம்மக்களின் அபிப்பிராயங்கள் எதுவும் பெறப்படாது யாழ்ப்பாண கலாசார நிலையம் "திருவள்ளுவர் கலாசார நிலையம்" எனப் பெயர் மாற்றப்பட்டுள்ளது. இது மக்களின் நாடித்துடிப்பு அறியாத செயல் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

யாழ். கலாசார நிலையத்தின் பெயர் மாற்றம் குறித்து பொ.ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தனது ஆதங்கத்தை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

யாழ்ப்பாண கலாசார நிலையம் யாழ். மாநகரசபைக்கு உரித்தான காணியில் இந்திய அரசின் நன்கொடையில் உருவானது. இதற்கான உடன்படிக்கையில் யாழ். கலாசார நிலையத்தை முகாமைத்துவம் செய்கின்ற குழுவில் யாழ் மாநகரசபையினதும் வடமாகாண



சபையினதும் சார்பில் ஒவ்வொருவர் இடம்பெறுவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும், இரண்டு சபைகளினதும் கலந்தாலோசிப்புகளின்றி இப்பெயர் மாற்றம் இடம்பெற்றுள்ளது. கோட்டாபய அரசாங்கம் யாழ். கலாசார நிலையத்தின் பெயரை மாற்றுமாறு முன்னர் அழுத்தங்களைப் பிரயோகித்தபோது மாநகரசபையின் எதிர்ப்பால் அது கைவிடப்பட்டது. இப்போது, இரு சபைகளுக்குமான தேர்தல்கள் நடைபெறவுள்ள நிலையில் திடுதிப்பென்று நிகழ்ந்த இப்பெயர் மாற்றம் இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை இந்தியா நாசூக்காக நிறைவேற்றிக்கொடுத்துள்ளது என்றே எண்ணவைத்துள்ளது.

சமயச்சாயத்தை தன் மீது ஒரு போதும் பூசிக்கொள்ளாத திருவள்ளுவரின் பெருமையை ஈழத்தமிழ் மக்கள் எப்போதும் போற்றுபவர்களாகவே உள்ளார்கள். அவர் தமிழுக்குத்தந்த பெரும் கொடையாம் திருக்குறளின் மகிமையை ஈழத்தமிழ் மக்கள் ஒரு போதும் மறவார்கள். இதனாலேயே தமிழகத்தில் வள்ளுவர் கோட்டத்தில் உள்ளதைப்போன்று அத்தனை குறள்களையும் காலத்தால் அழியாத வாறு கருங்கல்லில் பொறித்து திருக்குறள் வளாகம் ஒன்றைச் சிவபூமி தாபகர் கலாநிதி ஆறு திருமுருகன் யாழ்ப்பாணத்தில் உருவாக்கியுள்ளார்.

ஆனால் இத்தகைய பெரும் பற்றைத் திருவள்ளுவர் மீதும் திருக்குறள் மீதும் கொண்டிருக்கும் ஈழத்தமிழ் மக்களிடையே யாழ் கலாசார மையத்துக்கு அவர் பெயரைச் சூட்டியுள்ளமை பெரும் அதிருப்தியையே தோற்றுவித்துள்ளது.

யாழ். கலாசார மையம் தனித்துவமானதெனத் திறப்புவிழாக் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளதைப் போன்று அது இந்தியா எமக்கு உவந்தளித்த தனித்துவமான பெரும் கொடையே ஆகும். ஆனால், அதன் தனித்துவம் நெடிதுயர்ந்த அழகான அதன் கட்டுமானங்களால் மாத்திரம் உருவானதன்று. பண்பாட்டுச் செழுமையும் பாரம்பரியமும் மிக்க யாழ்ப்பாணம் என்ற பெயரைச் சூடியிருப்பதும் அதன் தனித்துவத்தை வெளிப்படுத்தும் அளப்பரிய ஓர் சிறப்பாகும். இப்போது, பெயர் மாற்றப்பட்டிருப்பதன் மூலம் அதன் தனித்துவம் ஒரு படி கீழிறங்கியுள்ளது என்பதே நிதர்சனம். அது மட்டுமல்ல, இப்பெயர் மாற்றத்தின் மூலம் ஈழத்தமிழ் மக்கள் இந்தியா மீது கொண்டிருக்கும் பெரும் நம்பிக்கையிலும் ஒரு படி கீழிறங்கியுள்ளது. – என்றும் குறிப்பிட்டுள்ளார்.



# பாடசாலை மாணவர்களுக்கு காலணிகளுக்கான வவுச்சர்

தேர்ந்தெடுக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் மத குருமார் கல்வி கற்கும் பாடசாலை மாணவர்களுக்கு ஒரு ஜோடி காலணிகள் வாங்குவதற்கான சுமார் 3,000 ரூபா வவுச்சர்கள் வழங்க அமைச்சரவையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பிரதமர் ஹரிணி அமரசூரிய சமர்ப்பித்த முன்மொழிவின்படி இந்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, 250 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட 6,000 பாடசாலைகளில் கல்விகற்கும் 650,000 மாணவர்களுக்கும் , 250 இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட தெரிவு செய்யப்பட்ட பாடசாலையின் 140,000 மாணவர்களுக்கும் இந்த வவுச்சர்கள் வழங்கப்படவுள்ளன.

கூடுதலாக, இந்தச் சான்றிதழ்கள் சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்கள் கல்விகற்கும் 28 பாடசாலையைச் சேர்ந்த 2,300 மாணவர்களுக்கும், பிரிவேனாக்களில் கல்விகற்கும் 30,000 சாதாரண மற்றும் துறவியர் மாணவர்களுக்கும் வழங்கப்பட உள்ளன.

மேலும், பாடசாலை மாணவர் ஊட்டச்சத்து திட்டத்தை 2025 ஆம் ஆண்டிலும் தொடர அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தேயிலைக் கொழுந்துகள் பங்கசுத் தொற்றால் பாதிப்பு

நாட்டின் பல பகுதிகளில் தேயிலை பயிர்ச்செய்கையில் ஏற்பட்டுள்ள இனந்தெரியாத பங்கசு தொற்று காரணமாக சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் பொருளாதார ரீதியாக நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர்.

இந்த பங்கசு தொற்றால் தேயிலை கொழுந்துகள் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் காரணமாகத் தேயிலை உற்பத்தியானது நூற்றுக்கு 40 முதல் 50 சதவீதமாகக் குறைவடைந்துள்ளது.

குறிப்பாக இரத்தினபுரி பலாங்கொடை உள்ளிட்ட பகுதிகளில் இந்த நிலைமை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பங்கசு தொற்றை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும் என சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் மனுஷ நாணயக்கார வாக்குமூலம்

முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார நேற்று முற்பகல் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கினார்.

தென்கொரியாவில் விவசாய மற்றும் மீன்பிடி தொழிலுக்காக நாட்டிலிருந்து தொழிலாளர்களை அனுப்பும் E8 விசா ஒப்பந்தம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகவே அவர் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையானார்.

இது தொடர்பாகத் தாம் கைது செய்வதற்கு முன்னதாக முன்கூட்டிய பிணைக்கான மனு ஒன்றை முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் சமர்ப்பித்திருந்தார்.

மேற்படி மனு கொழும்பு பிரதான நீதவான் தனுஜா லக்மாலி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது முன்னாள் அமைச்சர் மனுஷ நாணயக்கார குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கத்தயார் என அவரது சார்பில் மன்றில் முன்னிலையான சட்டத்தரணி தெரிவித்திருந்தார்.



# சீரற்ற காலநிலையால் 20,300 பேர் பாதிப்பு

சீரற்ற காலநிலை காரணமாக 6,785 குடும்பங்களைச் சேர்ந்த 20,300 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் 2 மரணங்கள் பதிவாகியுள்ளன என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. 3 பேர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன் பகுதியளவில் 173 வீடுகள் சேதமடைந்துள்ளன.



# நெல்லுக்கான குறைந்தபட்ச விலையினை நிர்ணயிக்க நடவடிக்கை; நாமல் கருணாரத்ன

நெல்லுக்கான உத்தரவாத விலைக்கு பதிலாக எதிர்காலத்தில் குறைந்தபட்ச விலையை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமென விவசாய மற்றும் கால்நடைவள பிரதியமைச்சர் நாமல் கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நெல் உற்பத்திக்கான விலையை மூன்றில் ஒரு பங்கு அதிகரித்து நெல் உற்பத்திக்கான விலையை நிர்ணயிக்க நடவடிக்கை எடுக்கப்படும். அந்த விலைக்கேற்பவே நெல் கொள்வனவு இடம்பெறும்.

அத்துடன், நெல்லுக்கான குறைந்த பட்ச விலையும் நிர்ணயிக்கப்படும்.

நெல் உற்பத்தியாளர்களிடம் இருந்து பெறப்படும் நெல்லுக்கான செலவினத்தைக் குறைத்து ஆலைகள், மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்கள் இலாபம் ஈட்டக் கூடிய வகையில் குறைந்தபட்ச விலை நிர்ணயிக்கப்படும்.

அத்துடன், ஒரு கிலோ அரிசியை சாதாரண விலையில் வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.” என்றார்.

# மட்டக்களப்பில் தொடரும் மழையின் வெள்ளத்தினால் 11,971 பேர் பாதிப்பு; 9 முகாம்களில் 921 பேர் தஞ்சம்!

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் சீரற்ற கால நிலை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் 11,971 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் 921 பேர் 9 முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். 17 வீடுகள் பகுதியளவில் பாதிக்கப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்காண ஏக்கர் வேளாண்மை நீரிர் மூழ்கியுள்ளன. மாவட்டதிள்ள சில பிரதேசங்களுக்கு வெளியிடங்களுக்குமான போக்குவரத்து மற்றும் ரயில் சேவைகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

கடந்த 18 ம் திதி ஆரம்பித்த கன மழையினால் மாவட்டதிலுள்ள பெரிய குளமான உன்னிச்சை குளம் மற்றும் குளங்கள் யாவும் நிரம்பியுள்ளன. இதனால் தேவைக்கு ஏற்றால் போல அவற்றின் வான்கதவுகள் திறக்கப்பட்டமையையடுத்து வயல் நிலங்கள் வெள்ள நீரில் மூழ்கின.

மாவட்டதிலுள்ள தாழ்நிலப்பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியமையால் 3,737 குடும்பங்களைச் சோர்ந்த 11,971 பேர் பாதிக்கப்பட்டனர். 17 வீடுகள் பகுதியளில் சேதமடைந்துள்ளன. 3,037 குடும்பங்களைச் சேர்ந்த 10,031 பேர் வீடுகளை விட்டு வெளியேறி உறவினர் வீடுகளில் தஞ்சடைந்துள்ளனர். 9 முகாம்களில் 334 குடும்பங்களைச் சேர்ந்த 921 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அனர்த்த முகாமைத்துவம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மாவட்டதிலுள்ள பல பிரதேசத்திலுள் வீதி, தாம்போதிகளின் மேலாக 4 அடி உயரத்துக்கு வெள்ள நீர் பாய்ந்து ஓடுவதால் வெல்லாவெளிக்கும் மண்டூருக்கும் இடையிலான போக்குவரத்தும் கிரானுக்கும் புலிபாய்ந்தகல் பிரதேசத்துக்குமான போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டதுடன் அதற்கான படகு சேவைகள் இடம்பெற்று வருகின்றது.

இந்த வெள்ள அனர்த்தினால் பாதிக்கப்பட்வர்களுக்கு சமைத்த உணவு வழங்கப்பட்டுவருவதுடன் தொடர்ந்து மழை பெய்வதால் வெள்ளத்தினால் இன்னும் பல குடும்பங்கள் குடியிருப்புக்களை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து மழைபெய்துவருவதால் மக்கள் தம் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமல் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

# இராசமாணிக்கத்தின் உருவச் சிலைக்கு மலர்மாலை சூட்டி கௌரவித்து அஞ்சலி

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் முன்னாள் தலைவரும், பட்டிருப்பு தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சீ.மு.இராசமாணிக்கம் அவர்களின் 112 ஆவது பிறந்த தின நினைவை முன்னிட்டு மட்டக்களப்பு களுவாஞ்சிக்குடியில் உள்ள அமரரின் திருவுருவச் சிலைக்கு நேற்று முன்தினம் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் களுவாஞ்சிக்குடி வட்டாரக்கிளையின் ஏற்பாட்டில் மலர்மாலை அணிவித்து கௌரவித்து அஞ்சலிக்கப்பட்டது.











# புதுச்சேரி மாணவிக்கு நீதி கோரி காங். மகளிர் அணி போராட்டம்

புதுச்சேரி தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் படிக்கும் வட மாநில மாணவிக்கு நீதி கோரி புதுச்சேரி சட்டப்பேரவையை முற்றுகையிட்டு மகளிர் காங்கிரஸார் நேற்று போராட்டம் நடத்தினர். அப்போது பொலிஸாருடன் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

புதுவை காலாப்பட்டு தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் மாணவியிடம் அந்த பகுதியை சேர்ந்த இளைஞர்கள் அத்துமீறினர். இது தொடர்பாக காலாப்பட்டு பொலிஸார் வழக்குப்பதிந்து 2 சிறுவர்கள் உட்பட 4 பேரை கைது செய்துள்ளனர். மாணவியிடம் ஏன் புகார் பெறவில்லை என அரசியல் கட்சியினர் கேள்வி எழுப்பி வருகின்றனர். இந்த நிலையில், நேற்று பல்கலைக்கழக மாணவிக்கு நியாயம் கேட்டு, சட்டப்பேரவை முற்றுகை போராட்டம் நடத்த மகிளா காங்கிரஸார் முடிவு எடுத்தனர்.

இதற்காக ஆம்பூர் சாலை அருகே துணைத் தலைவர் நிஷா தலைமையில் மகிளா காங்கிரஸார் கூடினர். அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தினர். ஆர்ப்பாட்டத்தில் மாநில காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி, முன்னாள் முதல்வர் நாராயணசாமி, சட்டப்பேரவை கட்சித் தலைவர் வைத்தியநாதன் உட்பட பலர் பங்கேற்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட மகிளா காங்கிரஸார் திடீரென அங்கிருந்து ஊர்வலமாக சட்டப்பேரவை நோக்கி சென்றனர். இதனால் அங்கு பதற்றம் ஏற்பட்டது. சட்டப்பேரவை பாதுகாவலர்கள் நுழைவுவாயிலை மூடினர். அப்போது அங்கு வந்த மகளிர் காங்கிரஸார், முதல்வரிடம் மனு அளிக்க வந்துள்ளதாக கூறினர். அவர்களை பாதுகாவலர்கள் அனுமதிக்க மறுத்ததால், நுழைவுவாயில் முன்பு தரையில் அமர்ந்து போராட்டம் நடத்தினர். இன்னும் சிலர் கேட்டை தள்ளியும், அதன்மீது ஏறியும் குதிக்க முயன்றனர்.

தகவலறிந்த பெரியகடை பொலிஸார் பெண் காவலர்களுடன் அங்கு குவிந்தனர். மகளிர் காங்கிரஸார் அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து பொலிஸார் அவர்களை அங்கிருந்து பொலிஸ் வாகனத்தில் ஏற்றினர். முக்கிய நிர்வாகிகள் 10 பேரை மட்டும் முதல்வரை சந்திக்க பொலிஸார் அனுமதித்தனர். இதனால் சட்டப்பேரவை முன்பாக பதற்றம் ஏற்பட்டுள்ளது.





# "எல்லை தாண்டி செல்ல வேண்டாம்"; தமிழக மீனவர்களுக்கு அறிவுறுத்தல்

இலங்கை கடற்படை சார்பில் ஜனவரி 24 மற்றும் 27ஆம் திகதிகளில் துப்பாக்கிச் சுடும் பயிற்சி நடைபெறுவதால், தமிழக மீனவர்கள் எல்லை தாண்டி சென்று மீன்பிடிக்க வேண்டாம் என தமிழக மீன்வளத் துறை அறிவுறுத்தியுள்ளது.

இலங்கையின் வடக்கு பிராந்திய கடற்படையினர், காங்கேசன்துறை மற்றும் பருத்தித்துறை கடற்பகுதியில் பி 475, பி 481 ஆகிய கடற்படை ரோந்து படகு ஃ கப்பல் மூலம் ஜனவரி 24, ஜனவரி 27 ஆகிய இரண்டு நாள்கள் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபடுகின்றனர்.

இந்தப் பகுதிகளில் மீனவர்கள் மீன்பிடிக்க செல்ல வேண்டாம்' என இலங்கை கடற்படையினர் சார்பில் யாழ்ப்பாண மீனவ சங்கங்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், பாக் ஜலசந்தி கடற்பகுதியில் மீன்பிடிக்கும் மீனவர்கள் சர்வதேச எல்லை தாண்டி சென்று மீன்பிடிக்க வேண்டாம் என மீன்வளத் துறை சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தமிழக ஊடகங்கள் இந்த விடயங்களை உள்ளடக்கி செய்தி வெளியிட்டுள்ளன.



# குடியரசுத் தினத்துக்காக தினமும் 145 நிமிடங்கள் டில்லி விமான நிலையத்தை மூடுவதற்கு தீர்மானம்

இந்தியாவின் 76 ஆவது குடியரசுத் தினம் எதிர்வரும் 26 ஆம் திகதி கொண்டாடப்படவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தற்போது தீவிரமாக நடைபெற்று வருகின்றது.

இந்நிலையில் குடியரசுத் தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி வரை டில்லி விமான நிலையத்தை தினமும் 2 மணி நேரம் 25 நிமிடங்களுக்கு மூடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக 8 நாள்களில் குறைந்தது 1,336 விமானங்களின் சேவைகள் பாதிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# துருக்கி ஹோட்டல் தீ விபத்தில் 10 பேர் பலி; 32 பேர் காயம்!

துருக்கியில் அமைந்துள்ள ஸ்கை ரிசார்ட் (ளமைை சநளழசவ) ஹோட்டலில் ஏற்பட்ட தீ விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். 2 பேர் காயமடைந்துள்ளனர்.

துருக்கியின் வடமேற்கில் உள்ள கர்தல்காயாவில் அமைந்துள்ள ஹோட்டலின் உணவகத்தில் நேற்று இரவு தீ விபத்து ஏற்பட்டதாக துருக்கி உள்துறை அமைச்சர் அலி யெர்லி காயா தெரிவித்துள்ளார்.

ஹோட்டல் அமைந்துள்ள போலு மாகாணத்தின் ஆளுநர், பாதிக்கப்பட்டவர்களில் இருவர் தீப்பரவலை அடுத்து பீதியில் கட்டடத்திலிருந்து குதித்து இறந்துள்ளனர் என அரசு நடத்தும் செய்தி நிறுவனமான அனடோலுவிடம் கூறினார்.

போலு ஆளுனரின் கருத்துப்படி, விபத்து நடந்த போது ஹோட்டலில் 234 விருந்தினர்கள் இருந்துள்ளனர் என கூறப்படுகிறது.



ஹோட்டலின் கூரை மற்றும் மேல் தளங்கள் தீப்பற்றி எரிவதை காட்டும் காட்சிகள் சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

தீ விபத்துக்கான காரணம் உடனடியாக தெரியவில்லை. ஹோட்டலின் வெளிப்புறத்தில் உள்ள மரப் பலகைகள் தீ பரவுவதை துரிதப்படுத்தியிருக்கலாம் என்று அதிகாரிகள் கூறியுள்ளனர்.

எவ்வாறெனினும்,தீவிபத்தைஅடுத்து சம்பவ இடத்திற்கு 30 தீயணைப்பு வாகனங்கள் மற்றும் 28 நோயாளர் காவுவண்டிகள் அனுப்பப்பட்டன என ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது.

கர்தல்காயா என்பது இஸ்தான்புல்லுக்கு கிழக்கே 300 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கோரோக்லு மலைகளில் உள்ள ஒரு பிரபலமான ஸ்கை ரிசார்ட் ஆகும்.

# காசா போர் நிறுத்தும் நிலைக்கும் என்பதில் தமக்கு நம்பிக்கை இல்லை என்கிறார் ட்ரம்ப்

“காசா போர் நிறுத்த ஒப்பந்தம் நிலைநிறுத்தப்படும் என்பதில் தமக்கு நம்பிக்கை இல்லை” என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

நிருபர் ஒருவரின் கேள்விக்கு பதிலளித்த டிரம்ப், ”அது எங்கள் போர் அல்ல, இது அவர்களின் போர். ஆனால் எனக்கு நம்பிக்கை இல்லை.” என்றார்.



இருப்பினும், ஹமாஸ் பலவீனமடைந்து விட்டதாகவும், காசா ஒரு பெரிய இடிப்பு தளம் போல் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



# காசாவில் 137 சடலங்கள் இடிபாடுகளில் இருந்து மீட்பு

காசாவின் ரஃபாவில் போர் நிறுத்தம் தொடங்கியதிலிருந்து இஸ்ரேலிய தாக்குதல்களில் கொல்லப்பட்ட பொதுமக்களின் 137 உடல்கள் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளன என காசாவின் பாலஸ்தீன சிவில் பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

காசாவில் உள்ள கொங்கிரீட் தரிசு நிலத்தின் கீழ் 10,000 உடல்கள் புதைக்கப்பட்டுள்ளன என கடந்த திங்களன்று அல் ஜசீரா செய்தி வெளியிட்டுள்ளது.

இஸ்ரேலிய அதிகாரிகளின் தகவல்களை மேற்கோள் காட்டி, ஐ.நா.வின் மனிதாபிமான அலுவலகம் நேற்று முன்தினம் 915 உதவி பாரவூர்திகள் காசாவிற்குள் நுழைந்ததாகக் கூறியது.

இஸ்ரேலிய படைகள் முற்றுகையிடப்பட்ட பிரதேசத்தின் மீது 15 மாதங்களாக நடத்திய குண்டுவீச்சை முடிவுக்குக் கொண்டுவந்த பின்னர், காசாவில் உள்ள பாலஸ்தீனியர்கள் தங்கள் பாழடைந்த வீடுகளுக்குத் திரும்பி வருகின்றனர். மேலும் மிகவும் தேவையான உணவு மற்றும் மருத்துவ உதவிக்காக காத்திருக்கிறார்கள்.

ஒக்டோபர் 7, 2023 முதல் காசா மீதான இஸ்ரேலின் போரில் குறைந்தது 47,035 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டனர். 111,091 பேர் காயமடைந்துள்ளனர்.



# இன்றைய ராசி பலன்கள் - 22.01.2025




இன்று வளர்ச்சி காண்பீர்கள். இன்று பல பயனுள்ள விடயங்களை செய்வீர்கள். உங்கள் இனிமையான வார்த்தைகள் பிறரைக் கவரும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை வெளிபடுத்துவீர்கள். இதனால் உங்கள் பணிக்கான நன்மதிப்பும் அங்கீகாரமும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வுடன் இருப்பீர்கள். இருவரும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று நிதிநிலைமை சுதந்திரமாக இருக்கும் வாய்ப்பு உள்ளது. இன்று நீங்கள் முக்கிய முதலீட்டு முடிவுகளை எடுக்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். எந்த விதமான ஆரோக்கிய குறைபாடும் இருக்காது.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்கும் போது கவனமாக இருக்க வேண்டும். உங்கள் அணுகுமுறையில் அமைதியும் எச்சரிக்கையும் தேவை. எதிர்பாராதவற்றைச் சந்திப்பீர்கள்.

பணியிடத்தில் சில சவால்களை சந்திக்க நேரும். பணயில் வெற்றி காண புத்திசாலித்தனம் மற்றும் திறமைகளை பயன்படுத்துங்கள். எந்த சூழ்நிலையிலும் பதற்றமடையாதீர்கள். அதனால் உங்கள் ஆற்றல் குறைந்து விடும்.

உங்கள் துணையிடம் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இருவரும் பிரச்சினைகளைத் தீர்க்கக் கலந்து ஆலோசிக்க வேண்டும். இதன் மூலம் இருவருக்கும் திருப்தி கிடைக்கும்.

இன்று நிதிநிலை சுமாரான பயனைத் தரும். வரவும் செலவும் சமமாக யாருக்கும்.




இன்றைய நாள் வெற்றிகரமாக அமைய பொறுமையும் அமைதியும் தேவை. பதட்டப்படாமல் சகஜமாக இருக்க வேண்டும்.

பணியிடத்தில் நீங்கள் சில கஷ்டங்களை சந்திக்க நேரும். என்றாலும் திட்டமிட்டு பணியாற்றினால் பலன்கள் உங்களுக்குச் சாதகமாக அமையும்.

உங்கள் துணையிடம் அமைதியாகப் பேச வேண்டும். அதன் மூலம் அவர் உங்கள் மதிப்பை உணர்ந்து கொள்வார். நல்லுறவு ஏற்பட சரியான விதத்தில் உங்கள் அன்பை வெளிப்படுத்த வேண்டும்.

எதிர்பாராத செலவினங்கள் காரணமாகப் பணப்பற்றாக்குறை காணப்படும். எதிர் காலத்துக்கென சேமிக்கும் பழக்கம் கொண்டிருந்தால் இன்று மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.




உங்கள் தகவல் பரிமாற்ற திறமையை மேம்படுத்த வேண்டும்.பொறுமையாக இருக்க வேண்டும். உங்கள் செயல்களில் தாமதங்களை சந்திக்க தயாராய் இருங்கள். திட்டமிடவேண்டியது அவசியம்.

சாதரணமாக ஆற்றும் பணிகளை விட இன்று சற்று கூடுதலான பணிகள் காணப்படும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தவறில்லாமல் கவனமாக ஆற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நகைச்சுவை உணர்வை வெளிப்படுத்த வேண்டும். இதன் மூலம் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்கலாம். நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளலாம்.

உங்கள் சம்பாத்தியம் குறைந்து காணப்பட்டாலும் நீங்கள் சேமிக்கும் பழக்கம் கொள்வீர்கள். சேமித்த பணம் பற்றாக்குறை சமயத்தில் பலன் தரும்.

உங்களுக்கு தொண்டை வலி ஏற்படாமல் இருக்க குளிர்ச்சியான உணவுகளை தவிர்க்கவும்.




இன்று அனுகூலமான நாள். உங்கள் செயல்களில் முன்னேற்றம் காணும் நாள். உங்கள் சுய உந்துதலும் முயற்சியும் வெற்றியை பெற்றுத் தரும் நாள். உங்கள் அனைத்து செயல்களிலும் வெற்றி கிடைக்கும் நாள்.

உங்களுக்கு இன்று பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. உங்கள் கடின உழைப்பு வெளிச்சத்துக்குவரும். மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும். குறைந்த நேரத்தில் தரமாக பணிகளை முடித்து தருவீர்கள்.

உங்கள் அன்பில் உங்கள் துணை மயங்குவார். அவருக்கு கிடைத்த முக்கியத்துவத்துக்கு மகிழ்ச்சியடைவார். இதன் மூலம் உறவு வலுப்படும்.

உங்கள் நிதிநிலை சிறப்பாக இருக்கும். உங்கள் வங்கியிருப்பு சிறப்பாக இருக்கும். நீங்கள் பணத்தைச் சேமிப்பீர்கள்.




இன்று முக்கிய முடிவுகள் எடுக்க உகந்த நாள் அல்ல. பொறுமையுடன் இருக்க வேண்டும். உங்கள் விருப்பங்கள் நிறைவேற காத்திருங்கள்.

யாரும் உங்கள் பணிகளை கவனிக்காவிட்டாலும் தரமான பணிகளை வழங்குங்கள் உங்கள் பணிக்கான பாராட்டு இப்பொழுதில்லாவிட்டாலும் பிறகு கிடைக்கும்.

உங்கள் துணையுடன் பழகும் போது பொறுமை தேவை. நட்புடன் அவருக்கு விஷயங்களை புரிய வைக்க வேண்டும். உங்கள் உறவின் மகிழ்ச்சி முழுதும் உங்கள் கைகளில்தான் உள்ளது.

இன்று வரவு செலவு இரண்டும் காணப்படும். இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக அமைய முடிந்த அளவு செலவை கட்டுப்படுத்த வேண்டும்.

தோல் பிரச்சினைகளை உருவாக்கும் என்பதால் இன்று எண்ணெய் பதார்த்தங்களை உண்ணாதீர்கள்.




ஆன்மீக ஈடுபாடு உங்களுக்கு ஆறுதலைத் தரும். முக்கிய முடிவுகளை வேறு சமயத்துக்குத் தள்ளிப் போடுங்கள். உங்கள் தகவல் பரிமாற்ற திறமையை வளர்த்துக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தரமானதாக குறித்த நேரத்தில் வழங்குவது உங்கள் கைகளில்தான் உள்ளது. இன்றைய நாளை சிறப்பாக திட்டமிடுங்கள். கவனச்சிதறலின்றி பணியாற்றுங்கள்.

உங்கள் திருமண வாழ்க்கை சிறப்பாக அமைய இருவரும் சமமாகப் பொறுப்பேற்றுச் செயற்பட வேண்டும். இருவரும் நட்புடன் இருந்தால் அனைத்தும் சிறப்பாக இருக்கும்.

பண விஷயத்தில் கவனமாக இருக்க வேண்டும். எவ்வளவு கவனமாக இருக்கிறீர்களோ அந்த அளவு பாதுகாப்பாக இருப்பீர்கள்.




முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். உங்களை எப்பொழுதும் உற்சாகமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இன்று தவறுகள் ஏற்பட அதிக வாய்ப்புள்ளதால் கவனமுடன் பணியாற்றவும். அர்ப்பணிப்புடன் பணியாற்றி உங்கள் மேலதிகாரிகளிடம் நற்பெயர் பெறுங்கள்.

இருவரும் எப்பொழுதும் உங்கள் கருத்துகளை சிறப்பாக பரிமாறிக் கொள்ள வேண்டும். எதைச் சொல்வதாக இருந்தாலும் அன்பாக அமைதியாக கூற வேண்டும்.

பணம் வந்து போகும். பணத்தை கவனமாக செலவு செய்ய வேண்டும்.

ஆரோக்கியமில்லாத உணவை உண்ணாதீர்கள். எண்ணெய் மற்றும் கார உணவுகள் உங்கள் முகத்தின் தோலை பாதிக்கும். முகத்தை அடிக்கடி தண்ணீரில் கழுவுங்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 22.01.2025




இன்று உங்களுக்கு அனுகூலமான நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உங்கள் உறுதியும் தைரியமும் உங்களை முன்னேற்றும்.

சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். உங்கள் மேலதிகாரிகள் உங்கள் பணியை பாராட்டுவார்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

சொல்லிலும் செயலிலும் உங்கள் துணையிடம் நீங்கள் அன்பாக நடந்து கொள்வீர்கள். இதனால் அவர் மகிழ்வார். உறவு வலுப்படும்.

இன்று உங்களிடம் பணம் அதிகமாக காணப்படும். இன்று நிதிநிலை சுதந்திரமாக இருக்கும்.

உங்கள் விருப்பபடி அனைத்தும் நடக்கும். நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். இது உங்கள் ஆரோக்கியத்தில் பிரதிபலிக்கும்.




இன்றைய நாள் அமைதியாக இருக்க பிரார்த்தனை மற்றும் தியானம் மேற்கொள்ளுங்கள். அனைத்து சூழ்நிலைகளையும் நீங்கள் சமாளிக்க தியானம் உங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

பணியாற்றும் பாணியில் கவனமாக இருங்கள். பணிகள் சிறிது அதிகமாக காணப்படும். அதனை நம்பிக்கையுடன் எற்றுக் கொண்டு சிறப்பாக ஆற்றுங்கள்.

உங்கள் இருவரிடையே சிறந்த தகவல் பரிமாற்றம் மற்றும் தெளிவு தேவை. இதன் மூலம் இருவர் உறவிலும் ஆர்வம் குறையாமல் இனிமை நிறைந்திருக்கும்.

ஏழைக்கு பண உதவி செய்வதன் மூலம் உங்களுக்கும் உங்கள் துணைக்கும் நல்ல பலன் கிடைக்கும். முன்னோர்களின் சாந்திக்கு சடங்குகள் செய்ய பணம் செலவழிப்பீர்கள்.




இன்று உங்களுக்கு வெற்றிகரமான நாள். இன்றைய நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள். இன்று முக்கிய முடிவுகள் எடுக்க இது உகந்த நாள்.

உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை தைரியமாக மேற்கொண்டு சிறப்பாக ஆற்றுங்கள். உங்கள் திறமைகளை காட்டுவதில் முனைப்பாக இருப்பதன் காரணமாக இன்று முழுவதும் பணியில் மூழ்கி இருப்பீர்கள்.

நீங்கள் உங்கள் துணையுடன் கட்டுப்பாடுடனும் பக்குவமாகவும் நடந்து கொள்வீர்கள். இதனால் உறவுப் பிணைப்பு செழிப்பாக இருக்கும். இன்றைய நாளை மறக்க முடியாத நாளாக ஆக்க இருவரும் வெளியிடங்களுக்கு சேர்ந்து செல்லுங்கள்.

இன்று நிதிநிலையில் நம்ப முடியாத அளவு பலன் இருக்கும். உங்கள் சொத்துக்கள் அதிகரிக்கும்.




வாழ்வில் உங்கள் பொறுப்புகள் அதிகமாகும். இது உங்களுக்குச் சிறிது பதற்றத்தை ஏற்படுத்தும். குழப்பம் ஏற்படாதபடி தெளிவான இலக்குகளை அமைத்துக் கொள்ளுங்கள்.

உங்கள் பணிக்கு இப்பொழுது சிறந்த அங்கீகாரம் கிடைக்காது. என்றாலும் நீங்கள் அர்ப்பணிப்புடன் பணியாற்றினால் நீங்கள் நினைத்ததை விட விரைவில் அங்கீகாரம் பெறுவீர்கள். நல்ல நேரம் காத்திருக்கிறது என்பதை மனதில் கொள்ளுங்கள். உங்களை நீங்கள் உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் துணையிடம் பேசும் போது வார்த்தைகளை தேர்ந்தெடுத்து பேசுங்கள். பக்குவமாகவும் நட்புடனும் நடந்து கொண்டால் நல்ல புரிந்துணர்வு வளரும்.

உங்கள் செலவுகள் குறைந்து சேமிப்பு அதிகரிக்க பரிகாரம் மேற்கொள்ளவேண்டியிருக்கும்.

# வாழைச்சேனை வயல்வெளிப் பிரதேசத்தில் வெள்ளத்தில் சிக்கிய 16 விவசாயிகள் மீட்பு

**(கனகராசா சரவணன்)**

வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிடைச்சிமடு, ஆத்துச்சேனை வயல் பிரதேசத்தில் வெள்ளத்தில் சிக்கிய 16 விவசாயிகளை நேற்று செவ்வாக்கிழமை கல்குடா அனர்த்த அவசர சேவை மீட்பு அணியினால் பாதுகாப்பாக மீட்கப்பட்டு கரைசேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தப் பிரதேசத்திலுள் வயல் வெளியில் வேளாண்மை நடவடிக்கைகளுக்காக திங்கட்கிழமை விவசாயிகள் சென்ற நிலையில் வயல்கள், பாதைகள் வெள்ளத்தில் மூழ்கின.

அவர்களை மீட்பதற்கான நடவடிக்கையை சமூக செயற்பாட்டாளரும் கல்குடா டைவர்ஸின் ஆலோசகருமான முபாறக் ஹாஜியார் கோறளைப்பற்று மேற்கு, ஓட்டமாவடி பிரதேச செயலாளர் ஏ.தாஹிறின் மற்றும் பிரதேச சபையின் செயலாளர் எஸ். எம்.சஹாப்தீன் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.



இதனையடுத்து கல்குடா அனர்த்த அவசர சேவை மீட்பு அணியினர் இயந்திர படகுமூலம் வயல்பிரதேசங்களுக்கு சென்று 16 விவசாயிகளையும் மீட்டுக் கரைக்கு கொண்டுவந்தனர்.